Registered as a Newspaper

PAPER CLASS
PHYSICS:
திரு. சத்தியசீலன்
CHEMISTRY:
திரு. மக்லி
செவ்வாய் வியாழன்
2.30 — 4.30
விவரங்களுக்கு:-
New Master Institute
BMC Lane, Jaffna.

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

PAPER CLASS
சனி, ஞாயிறு
காலை 8.30—12.30
Physics - திரு. வர்ணம்
Chemistry - திரு. தில்லை நாதன்
Botany - திரு. குகாதரன்
Zoology - திரு. நாகநாதன்
Pure
Applied ]-Maths
-திரு. நல்லையா
New Master Institute
BMC Lane, Jaffna.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸூ தை மீ 14 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 16 (27-01-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:-60

# எட்டு தமிழரும் 3 பொலிஸாரும் சுட்டுக் கொலை

## ஒட்டுசுட்டானில் நேரடி மோதல்

கொழும்பு, ஜன. 27

ஒட்டுசுட்டானில் போராளிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நடந்த நேரடி மோதலில் சார்ஜண்ட் ஒருவரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் கொல்லப்பட்டனர்.

எட்டுத் தமிழர்களும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டானில் நேற்றுக்காலை 9 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இறைச்சி வாங்குவதற்காக ஜீப் ஒன்றில் வந்து இறங்கிய பொலிஸாரை போராளிகள் நேரடியாகத் தாக்கியதாகவும் —

பொலிஸார் திருப்பிச் சுட்டதாகவும் கூறப்படுகிறது.

அங்கு நின்ற பொது மக்கள் எட்டுப்பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்கள்.

இந்தச் சம்பவத்தினால் அப் பகுதியில் நேற்று பெரும் பதற்றம் நிலவியது.

## லலித் மன்னார் விஜயம்

கொழும்பு, ஜன 27

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்று மன்னார் இராணுவ முகாமுக்கு விஜயம் செய்தார்.

அங்கு அவர் முப்படை கூட்டு ரோந்து திட்டம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

கடந்த சனியன்று பலாலி இராணுவ முகாமில் கூட்டு ரோந்து திட்டத்தை அவர் ஆரம்பித்து வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுன்னாகத்தில் இன்று பேரணி பொதுக்கூட்டம்

சுன்னாகம், ஜன. 27

பாதுகாப்புப்படையினரின் இனப்படுகொலை, மக்கள் விரோதச் செயல் ஆகியவற்றைக் கண்டித்தும், பாதுகாப்பு வலயத்தை அகற்றக் கோரியும் மாபெரும் பேரணியும் பொதுக் கூட்டம் ஒன்றும் இன்று சுன்னாகத்தில் நடைபெறுகிறது.

இன்று இரண்டில் மத்திய சந்தையிலிருந்து புறப்படும் பேரணி கே. கே. எஸ். வீதி வழியாக சுன்னாகம் பொதுச்சந்தையை சென்றடையும்.

அங்கு பொதுக்கூட்டம் நடக்க ஏற்பாடாகியிருக்கிறது.

## அம்பிகைபாகன் காலமானார்

சுன்னாகம், ஜன. 27

வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் சிறந்தகல்விமானுமான திரு. ச. அம்பிகைபாகன் நேற்று மல்லாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## முச்சந்திமுரளி



தமிழ்ப் பெடியள் பயங்கரவாதியள் இல்லை. அவை சுதந்திரப் போராட்ட வீரர். இப்பிடிக் கொழும்பிலை வைச்சுத் துணிச்சலாச் சொல்லி கவண்மேந்தின்ரை மூகத்திலை அடிச்சவ எல்லோ இந்த அலன் அம்மையார்!

## சுபநேரம்

27.1.1986
திங்கட்கிழமை

சுபநேரம்:
12.36 முதல் 2.06 வரை
ராகுகாலம்:
8.06 முதல் 9.36 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# சிறிமா கட்சியில் சிறில் மத்தியூ ?

## இருவரும் இரகசிய பேச்சு

கொழும்பு, ஜன. 25

முன்னாள் அமைச்சரும் தற்போது ஐக்கிய தேசிய கட்சி எம். பியுமான திரு சிறில் மத்தியூ, திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக் கட்சியில் சேருவாரா?

மூடிய கதவுக்குப் பின்னால் இருவரும் இரகசிய பேச்சுக்களை நடத்தியிருப்பதை அடுத்தே கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இப்படி ஒரு கேள்வி எழுந்துள்ளது.

இந்திய — இலங்கைக் குடியுரிமைச் சட்ட மூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துடன், சுதந்திரக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ சத்துருக்கொண்டானில்

# கண்ணிவெடி!

## 2 பொலீஸார் காயம்

மட்டக்களப்பு, ஜன. 27

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் இடம் பெற்ற கண்ணி வெடி விபத்தில் இரண்டு அதிரடிப் பொலீஸார் படுகாயம் அடைந்தனர்.

நேற்றுப் பகல் 12.30 மணியளவில் இது நடந்தது.

கல்லடியில் இருந்து ஏறூர் நோக்கி 3 வாகனங்களில் அதிரடிப் பொலீஸார் சென்றனர்.

சத்துருக்கொண்டான் என்ற இடத்துக்கு அருகில் சென்ற சமயம் கண்ணி வெடி வெடித்தது.

மூன்றாவதாகச் சென்ற வாகனமதான் விபத்தில் சிக்கியது.

வாகனத்தின் முன் பக்கம் சேதமடைந்தது.

அதில் இருந்த அதிரடிப் பொலீஸாரில் 2 பேர் படுகாயமடைந்தனர்.

முதல் 2 வாகனங்களும் தப்பிவிட்டன.

அதன் பின்னர் அந்த இடத்துக்கு அருகில் முகாம் ஒன்றில் தங்கியுள்ள அகதிகளில் 15 இளைஞர்களை அதிரடிப் படையினர் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

## விமர்சிக்க முடியாத நிலையில் உலக வங்கி

### பிராந்திய தலைவர்!

கொழும்பு, ஜன. 27

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு கூடுதல் பணத்தை இலங்கை அரசு ஒதுக்கியுள்ளது.

இது உலக வங்கியின் கவனத்தை ஈர்த்துள்ளது

ஆனால் இறைமையுள்ள இலங்கை அரசின் தீர்மானத்தின் மீதுதான் நிதி ஒதுக்கப்படுகிறது.

ஆகவே அதுபற்றி விமர்சிக்க முடியாது.

இப்படி உலக வங்கியின் பிராந்தியத் தலைவர் திரு டேவிற் ஹொப்பர் கொழும்பில் தெரிவித்தார்.

எயர் லங்கா விமான சேவை நிறுவனத்துக்கு இலங்கை அரசு பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து உதவுவது குறித்து திரு. ஹொப்பர் அதிருப்தி தெரிவித்தார்.

விமான சேவை நிறுவனத்துக்குக் கொடுக்கும் பெருந் தொகைப் பணத்தை, பொது மக்களுக்கு உதவும் நலன் புரித் திட்டங்களுக்கு அரசு செலவழித்திருந்தால் பயன் கிடைத்து இருக்கும் என்றும் திரு. ஹொப்பர் சொன்னார்.

## "கர்ப்பிணி" பெண் வயிற்றில் தங்கம்!

கொழும்பு, ஜன. 27

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய "கர்ப்பிணி" பெண் ஒருவரின் வயிற்றிலிருந்து 24 லட்சம் ரூபா பெறுமதியான 60 தங்கப் பாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றின் எடை ஏழு கிலோவாகும்.

சுங்க அதிகாரிகள் நேற்று இக்கடத்தலை முறியடித்தார்கள்.

இந்தப் பெண் பாகிஸ்தான் பிரஜை. பாங்கொக்கிலிருந்து நேற்று விமானம் மூலம் வந்திறங்கினார்.

கர்ப்பிணி பெண்போல் நடித்த இந்த யுவதியின் நடமாட்டத்தில் சுங்க அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது

பலத்த சோதனைக்கு அவரை உட்படுத்தினார்கள்.

வீங்கியிருந்த அவரது வயிற்றில் குழந்தை இருக்கவில்லை. பதிலாக உடையில் 60 தங்கப் பாளங்கள் சாதுரியமாக இணைக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

சுங்கத் திணைக்களம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறது.

சம்பந்தப்பட்ட பெண் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# தமிழரைத் தாக்குவதை நிறுத்து; இனப்பிரச்சினையை தீர்க்குக!

## அலன் தம்பதிகள் ஜே. ஆருக்கு கடிதம்

வாஷிங்டன், ஜன. 26

வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களை உடனடியாக அகற்ற வேண்டும்

தமிழ் விடுதலை இயக்கத் தலைவர்களையும், கூட்டணித் தலைவர்களையும் உடனடியாக இலங்கைக்கு அழைப்பித்து அவர்களுடன் நேரடியாகப் பேசி தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாண வேண்டும்.

இப்படி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை கடிதம் மூலம் கோரியிருக்கிறார்கள் அமெரிக்கர்களான அலன் தம்பதியர்கள்.

அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்காக முன்னர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய வேளையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் இவர்கள் இருவரும் கடத்தப்பட்டு, கௌரவமாக நடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டனர் என்பது தெரிந்ததே.

திட்டமிட்டுத் தமிழ் மக்களைத் தாக்குவது உடனடியாகத் தடுத்து நிறுத்தும்படியும் அவர்கள் தமது கடிதத்தில் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## கருணாநிதி, நெடுமாறனும் கடிதம்



சென்னை, ஜன. 26

வடக்கு- கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்த்து வைக்கும்படி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் திரு. மு. கருணாநிதியும், காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி. நெடுமாறனும் கடிதம் மூலம் கேட்டிருக்கிறார்கள்.

ஆயுதப்படையை ஏவி தமிழ் மக்களை சுட்டுக் கொல்வதால் எந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

இலங்கை அரசின் நடவடிக்கைகளினால் உலக மட்டத்தில் இலங்கை பற்றி தவறான அபிப்பிராயம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது.

தனது பாதுகாப்பு படையையே அடக்கி கட்டுப்படுத்த முடியாத இலங்கை அரசு தமிழ் மக்கள்மீது தனது ஆதிக்கத்தைச் செலுத்த முயலுவது ஏன்?

இப்படி அவர்கள் தமது கடிதத்தில் கேட்டிருக்கிறார்கள்.

வடக்கு -- கிழக்கு இணைப்பு தவிர்ந்த

# கூட்டணியினரின் மூன்று யோசனைகளை அரசு ஏற்குமா?

## பெப். 3 இல் பண்டாரி கொழும்பு வருகிறார்

கொழும்பு,ஜன.27

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளில் வடக்கு, கிழக்கு இணைப்புத் தவிர்ந்த ஏனைய அம்சங்களை அரசாங்கம் சிறு,சில மாற்றம் செய்து ஏற்றுக் கொள்ளலாம்.

இது சம்பந்தமான பூர்வாங்க பதிலை இலங்கை அரசு இந்தியாவுக்கு தெரியப்படுத்தி இருப்பதாகவும் அறிய வருகிறது.

அதனைத் தொடர்ந்து இந்தியவெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி அடுத்த மாதம் மூன்றாம் திகதி கொழும்பு வருவது நிச்சயமாகிவிட்டதாக நம்பிக்கையாக அறியப்படுகிறது.

திரு. ரொமேஷ் பண்டாரி ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன, தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி, திரு. நீலன் திருச்செல்வம் ஆகி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனின் சடலம் கண்டுபிடிப்பு

கரவெட்டி, ஜன. 27

கரவெட்டி புதுத்தோட்டம் என்னும் இடத்தில் மர்மமான முறையில் கொலையுண்ட ஓர் இளைஞனின் சடலம் கடந்த சனிக்கிழமை இரவு கண்டுபிடிக்கப்பட்டது.

கரவெட்டி, புதுத் தோட்டத்தில் வைரவர் கோயில் ஒன்றிற்கு அருகாமையில் பற்றையொன்றினுள் முதுகிலும் வயிற்றிலும், தொடையிலும் காயங்களுடன் இளைஞனின் சடலம் காணப்பட்டது.

இறந்த இளைஞன் கந்தன் தனபாலசிங்கம் என பின்னர் அடையாளம் காணப்பட்டது. இராசகிராமத்தைச் சேர்ந்த இந்த இளைஞன் மில் ஒன்றில் வேலை செய்துவந்தார்.

## உதயனின் வார இதழ் சஞ்சீவி

## திருமலையில் தமிழ் அகதிகள் வெளியேறுமாறு மிரட்டல்

நல்லூர், ஜன. 27

திருமலையில் உள்ள தமிழ் அகதி முகாம்களுக்கு இரவு நேரங்களில் கல்லெறியப்படுகிறதாம்.

அத்தோடு தமிழர்களை விரைவில் வெளியேறி விடுமாறும் ஊர்காவல் படையினர் மிரட்டுகின்றனராம்.

கடந்த வியாழக்கிழமை திருமலையில் இருந்து ஐந்து தமிழ்க் குடும்பத்தினர் நல்லூர் சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்திற்கு வந்து சேர்ந்தனர்.

மேற்கண்ட தகவல்களை இவர்களே வெளியிட்டனர்.

தமிழர்களை பூண்டோடு அழித்து விடுவோம். உடனடியாக இங்கிருந்து வெளியேறி விடுங்கள்.

இல்லையேல் நாய்போல் உங்களை சுட்டுத் தள்ளுவோம்.

இப்படி ஊர்காவல் படையினர் தங்களை மிரட்டுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் அறிக்கை:

# தெல்லிப்பளையில் போராளிகள் சேர்ந்து நடத்திய வீரம் செறிந்த போர்

## படை தாக்குதலில் இறந்தவர் அனைவரும் பொதுமக்களே

சென்னை, ஜன. 26

தெல்லிப்பளையில் போராளிகள் அனைவரும் ஒன்றிணைந்து வீரம் செறிந்தபோர் ஒன்றை நடத்தினார்கள். ஆயுதப் படையை முறியடித்தார்கள்.

இந்த மோதலில் ஆயுதப்படையினர் நடத்திய தாக்குதலில் இறந்தவர்கள் அனைவரும் பொது மக்களே. போராளிகள் எவரும் உயிரிழக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவித்திருக்கிறது.

சென்னையில் நேற்று விடுக்கப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தெல்லிப்பளை, வயாவிளான் பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நேரடிச்சமரில் ஆயுதப் படையை சேர்ந்த 7பேர் கொல்லப்பட்டனர், 6 பேர் படுகாயமடைந்தனர்.

தெல்லிப்பளைச் சந்திக்கும் ஆஸ்பத்திரிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த மோதலில், அங்குள்ள ரயில் கடவை மதகு அருகில் மட்டும் மூன்று ஆயுதப் படையினர் கொல்லப்பட்டார்கள்.

நேரடிச் சமர் சுமார் நாலரை மணிநேரம் நீடித்தது. ஆயுதப் படையினரால் உபயோகிக்கப்பட்ட ஹெலிக்கொப்டரும், அவ்ரோ விமானமும் எங்களாலும் சக இயக்கப் போராளிகளாலும் பலத்த சேதத்திற்குள்ளாக்கப்பட்டது. ஹெலிக்கொப்டரில் இருந்த மூன்று ஆயுதப்படையினர் படுகாயமடைந்தனர்.

தாக்குதலுக்குள்ளான அவ்ரோ விமானத்தின் தொடர்பு சாதனப்பகுதி பலத்த சேதம் அடைந்தது. அவ்விமான ஓட்டியும் கொழும்பு இராணுவ வைத்திய சாலையில் இறந்தார். அந்த விமானத்தில் கடமையில் இருந்த மேலும் இருவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபனின் அங்கிளாம் முதல்வர் எம்.ஜி.ஆர்.

'முதல் மரியாதை' படத்தின் மூலம் திரையுலகுக்கு அறிமுகமானவர் தீபன். வயதில் இளையவர். சுறுசுறுப்பான இளைஞர்.

இவரின் உண்மைப் பெயர் ராமச்சந்திரன் வீட்டுப் பெயர் ராஜா. நடிகர் பாண்டியனின் நெருங்கிய நண்பர்.

இன்னொரு புதினமும் இருக்கிறது. அது என்ன தெரியுமா? இவர் முதல்வர் எம். ஜி. ஆரின் உறவினர்.

நடிகை நளினி பக்கத்து வீடுக்காரர். குடும்ப நண்பர்களில் ஒருவர். அவர் தான் இவரை சினிமாவில் நடிப்பதற்கு உற்சாகம் ஊட்டியவர்.

'நான் டிராமாவில் நடித்தது கூட இல்லை. பி. ஏ. படித்துக் கொண்டிருக்கிறேன். எனது அங்கிள், ஆண்டி, தாத்தா கலையுலகில் கொடி கட்டிப் பறந்தவர்கள். அந்த ஆசை எனக்கு மட்டும் வராமல் போகுமா?'' என்கிறார் தீபன்.

இவர் அங்கிள் என்று குறிப்பிடுவது யாரை என்று நினைக்கிறீர்கள். முதல்வர் எம். ஜி. ஆரைத் தான் ஆண்டி முதலவரின் துணைவியார் வி. என். ஜானகி.

தீபன் முதன் முதலாக நடிகக சான்ஸ் கேட்டு கதாசிரியர் கலைமணியைச் சந்தித்தார். அவரது படத்தில் அறிமுகமாவதற்கு முன் நடிகர் திலகத்துடன் ''முதல் மரியாதை'' யில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

சிவ சமுத்திரத்தில் ''குருவி குருவி'' என்று ரஞ்சனியுடன் பாடும் காட்சியே முதன் முதல் தீபன் நடித்த சீன்.

இன்னுமொரு காட்சியில் அழுது உணர்ச்சிகரமாக நடிக்க வேண்டி இருந்தது. எப்படி நடிப்பது என்ற திகில் அவருக்கு.

இதை அவதனித்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ''இப்படிச் செய்'' என்று நடித்துக் காட்டி உற்சாகப் படுத்தினராம். இதை பெருமையாகக் குறிப்பிடுகிருர் தீபன்.

தினசரி சினிமா

# சண்டிகார் பிரச்சினையில் இழுபறி நிலை

## பஞ்சாப் ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் நெருக்கடி

புதுடில்லி, ஜன. 26

பஞ்சாப பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் மீண்டும் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சண்டிகார் நகரை பஞ்சாப் மாநிலத்திடம் ஒப்படைக்கும் திட்டம் இறுதிநேரத்தில் தள்ளி வைக்கப்பட்டது.

பஞ்சாப் மாநிலத்தில் சில இந்தி பேசும் பகுதிகளை, சண்டிகாருக்கு பதிலாக ஹரியாணு மாநிலத்துக்குக் கொடுப்பது பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண மத்தியூ கமிஷன் தவறியதே இதற்குக் காரணமாகும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதனுல் இரண்டு மாநிலங்களிலும் பதற்ற நிலைமை ஏற்பட்டுளளது. இராணுவம் உஷார் படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பராதுகாப்புக்கள் இரண்டு மாநிலங்களிலும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளன.

இதனிடையில் பஞ்சாப், ஹரியாணு மாநில முதல் அமைச்சர்களை மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் இன்று சந்திப்பதாக இருந்தது.

சமரச தீர்வு ஒன்றைக் காண்பதே இச்சந்திப்பின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஹரியாணு, பஞ்சாப் மாநிலங்களுக்கு பொதுத் தலைநகராக விளங்கும் சண்டிகாரை பஞ்சாபிடம் முழுதாக ஒப்படைப்பதற்கு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி பஞ்சாப் மிதவாதத் தலைவர்களிடம் இணக்கம் தெரிவித்தார்.

ராஜீவின், பஞ்சாப் ஒப்பந்தத்தில் இது முக்கியவிடயமாக இருந்தது.

எனினும் இதற்கு ஹரியாணுவில் பலத் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வந்தது.

பஞ்சாப் உடன்படிக்கையின் படி, சண்டிகாரை பஞ்சாப் மாநிலத்துக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

அதற்குப் பதிலாக பஞ்சாப் மாநிலத்தில் உள்ள 54 இந்திமொழி பேசும் கிராமங்கள் ஹரியாணு மாநிலத்துக்கு வழங்கப்பட வேண்டும்.

பஞ்சாப் கிராமங்களை ஹரியாணுவிடம் ஒப்படைப்பதை பஞ்சாப் தீவிரவாத இயக்கங்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றன.

## வெளி உலகில்

### மாணவரை பிரம்பால் அடிப்பது மனித உரிமை மீறலா?

#### பிரிட்டனில் பெற்றேர் முறையீடு

லண்டன், ஜன. 26

பாடசாலைகளில் மாணவரை பிரம்பினுல் அடிப்பது, மனித உரிமை மீறல் ஆகும். இப்படி தெரிவித்து மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய ஆணைக்குழுவுக்கு முறையீடு ஒன்று செய்யப்பட்டிருக்கிறது

''1983இல் லண்டனில் உள்ள பாடசாலை ஒன்றில் 18 வயது மகளுக்கும் 16 வயது மகனுக்கும் ஆசிரியர் பிரம்பினுல் அடித்துத் தண்டனை வழங்கியது, ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடுவதுக்கு ஒப்பான செயலாகும்.

பிரிட்டன் கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்ட மனிதஉரிமைசாசனத்தையும் இது மீறுகின்றது'' —இப்படி தாய் ஒருத்தி இந்த ஆணைக்குழுவுக்கு முறையிட்டுள்ளார்.

இந்த முறையீடு ஏற்றுக் கொள்ளக்கூடியது என்று ஆணைக்குழு உத்தரவிட்டதுடன், முறையீட்டை விசாரிக்கவும் இணங்கியது.

ஒரு மாணவனின் வாழ்வில் பிரம்புத் தண்டனை தேவையற்ற செயலாகக் கருத முடியாது என்று பிரிட்டிஷ் அரசு சமாதானம் கூறியும், ஆணைக்குழு இந்த முடிவை எடுத்தது.

### பிலிப்பீன்ஸ் ஜனதிபதி கூற்று கிளப்பிய சர்ச்சை

மணிலா, ஜன. 26

பெண்களுக்கு உரிய இடம் படுக்கை அறை தான் என்று பிலிப்பீன்ஸ் ஜனதிபதி சொன்னது, பெண்கள் மத்தியில் ஆத்திரத்தை உண்டாக்கி உள்ளது.

''இருக்கலாம். அவர் பெண்களைச் சந்திப்பது அந்த வட்டத்துக்குள் தான் போலும்'' இப்படி மணிலா பல்கலைக்கழக பேராசிரியர் திருமதி டொரீன் பெர்னுண்டஸ் சொன்னுர்.

''திரு. மார்கோஸுக்கு பெண்கள் போகப் பொருள் தான். அடிமைகளாகத் தான் அவர் கருதுகிருர் போலும்'' இப்படி திரு. மார்கோஸ் கருதுகிருரா?

இப்படி பெண்கள் அபிப்பிராயம் வெளியிட்டனர்.

குழந்தை உணவில் நச்சு

### பிரிட்டிஷ் நிறுவனம் இழுத்து மூடப்படுகிறது

குழந்தை உணவு தயாரிக்கும் பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று நட்டம் காரணமாகமூடப்படுகின்றது.

மிகப்பிரபலம் பெற்ற பார்லி(Farley) நிறுவனத்துக்கே இந்தக்கதி ஏற்பட்டுள்ளது.

அண்மையில் இந்த நிறுவனம் உற்பத்தி செய்த குழந்தை உணவான கொம்பிளான், ஒஸ்டர் பால்மா வகைகளில் நச்சுப் பொருள்கள் கலந்திருந்தன என்று அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நான்கு வகை பால்உணவுகளை நிறுவனம் சந்தையில் இருந்துவாபஸ் வாங்கியது.

இதனுல் அந்த நிறுவனத்துக்கு 56 லட்சம் டாலர் நட்டமேற்பட்டதாம்.

இதைத் தொடர்ந்தே, பார்லி நிறுவனத்தைக் கலைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

பார்லி நிறுவனத்தின் குழந்தைஉணவு வகைகள் உலகில் 40 நாடுகளில் விற்பனையாகின்றன.

நச்சுப்பொருள் கலந்த இந்த பால் மா வகைகள் இலங்கையில் இருந்தும் வாபஸ் பெறப்பட்டன என்பதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

### திருப்பதி பக்தர்களின் வினோத காணிக்கை

திருப்பதி, ஜன. 26

திருப்பதி வேங்கடேஸ்வரா ஆலயத்தின் உண்டியலில் வினோதமான காணிக்கைகள் போடப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது

இனந்தெரியாத பக்தர் ஒருவர் ஒரு பொதி சாராயப் போத்தல்களை உண்டியலில் போட்டு இருந்தார்.

ஆலய நிர்வாகிகள் அந்தப் பொதியை உடனே அகற்றிவிட்டனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒரு பக்தர் துணியால் மூடிய பார்சல் ஒன்றை காணிக்கையாகக் கொடுத்திருந்தார்.

பார்சலைப் பிரித்துப் பார்த்தபோது உள்ளே கோழி முட்டை காணப்பட்டது. முட்டை குப்பைக்கூடைக்குள் வீசப்பட்டது

உண்டியலில் பணம், நகைகளுடன் சிகரெட்டுகள், பவுடர் டின்கள் முதலியனவும் காணிக்கையாகப் போடப்படுகின்றனவாம்.

இன்னொரு பக்தர் உண்டியலில் 10 லட்சம் ரூபா பணத்தைப் போட்டிருந்தார்.

அப்பணத்தை நித்திய அன்னதான திட்டத்துக்கு பயன்படுத்தும்படி அந்த பக்தர் கோரியிருந்தார்.

### தாயகம் திரும்புகிருர் பெனுஸிர் பூட்டோ

லண்டன், ஜன 26

பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவரான செல்வி பெனுஸிர் பூட்டோ மார்ச் மாதம் தாயகம் திரும்புவார்.

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக நாடு திரும்ப இருப்பதாக பெனுஸிர் பூட்டோ பி.பி.சி வானொலிக்குத் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் அகற்றப்பட்டது ஓர் அரசியல் மோசடி - என்றும் அவர் சொன்னுர்

''நான் இங்கிலாந்துக்குச் சொந்தமில்லை வேறு நாடுகளும் எனக்குச் சொந்தம் இல்லை. பாகிஸ்தான் தான் எனது சொந்த நாடு''- இப்படி பெனுஸிர் சொன்னுர்.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### யாழ் பல்கலைக்கழக தேசிய மாணவர் மன்றம் போராட்டத்துக்கு ஆதரவு

நல்லூர், ஜன. 27

வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்குழுவும் ஏனைய வெகுஜன அமைப்புகளும் இயக்கங்களும் நடத்தும் 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்துக்கு எதிரான போராட்டத்தில தாமும் கலந்து கொண்டு தம்மாலியன்ற பங்களிப்பைச் செய்வதென யாழ் பல்கலைக்கழக தேசிய மாணவர் மன்றம் தீர்மானித்துள்ளது.

இதுபற்றிய அறிக்கை ஒன்றையும் இம் மன்றம் வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:

1000 மீற்றர் தடைச் சட்டத்திற்கு எதிராக தேசிய மாணவர் மன்றம் தொடர்ச்சியான வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லத் தீர்மானித்துள்ளது.

இதற்காக பிரஸ்தாப மாணவர் மன்றம் அனைத்து வெகுஜன அமைப்புகளினதும் முற்போக்கு சக்திகளினதும் ஆதரவை வேண்டி நிற்கிறது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபிரதேச தொழிற்சங்கக் கூட்டுக்குழுவும் ஏனைய வெகுஜன அமைப்புகளும் புதன்கிழமை மேற்கொள்ளும் போராட்டத்துக்குத் தம் மாலியன்ற பங்களிப்பை வழங்கவும் தேசிய மாணவர் மன்றம் தீர்மானித்துள்ளது.

### விடுதலை இயக்க வகுப்பில் கலந்து கொண்டாராம்

கொழும்பு, ஜன. 27

விடுதலை இயக்க வகுப்பில் கலந்து கொண்டார் என்ற குற்றச் சாட்டில் மயில்வாகனம் ஜீவரெத்தினம் என்ற இளைஞர் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இவ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விசாரணையை மார்ச் 4 ஆம் திகதிக்கு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. லக்ஷ்மன் வீரசேகரா ஒத்திவைத்தார்.

### தீ வைப்பதையும் உடைமைகளை நாசமாக்குவதையும் தவிர்க்குக

#### பொலீஸாருக்கு ஐ. ஜீ. பி. அறிவுரை

மட்டக்களப்பு, ஜன. 27

தீவிரவாதிகளைக் கண்டு பிடிக்கத் தந்திரோபாயங்களைக் கடைப் பிடிக்க வேண்டும். தீ வைப்பது, உடைமைகளை நாசமாக்குவது ஆகிய செயல்களைக் கூடுமான வரை தவிர்க்க வேண்டும்.

இப்படி பொலீஸ்மா அதிபர் திரு. சிரில் ஹேரத் கல்லடி முகாம் ஆயதப் படை வீரர்கள் மத்தியில் பேசுகையில் கூறினுர்.

இருதயபுரம் தாக்குதலை நடத்திய விதம் குறித்து அதிரடிப் பொலீஸ் படையினரை பொலீஸ்மா அதிபர் பாராட்டினுர்.

### சிறுவன் கடத்தல் பிக்கு கைது

கொழும்பு ஜன. 27

அகலவத்தைப் பகுதியில் 14 வயதுச் சிறுவன் கடத்தப்பட்ட சம்பவம் குறித்து பௌத்த பிக்கு ஒருவரை பொலீஸார் கைது செய்தனர்.

விசாரணைக்காக பிக்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி கொள்ளை

### வார விடுமுறைகளில் நஷ்டஈடு வழங்கல்

மட்டக்களப்பு, ஜன. 27

காத்தான்குடி வங்கி கொள்ளையினுல் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான நஷ்டஈடு வாராந்தம் 650 பேர் என்ற அடிப்படையில் இம்மாத நடுப்பகுதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது.

இத்தகவலை மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் திரு சே. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

நஷ்டஈடு ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை தினங்களில் மட்டக்களப்பு நகர கிளையில் வழங்கப்பட்டு வருகிறது

1984ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் திகதி நடைபெற்ற இக்கொள்ளையில் சுமார் 6 ஆயிரம் வாடிக்கையாளர்களுக்குரிய தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

வங்கியினுல் வழங்கப்படும் நஷ்டஈடு, கொள்ளையடிக்கப்பட்ட தினம் வரையிலான வட்டியை முதலுடன் கழித்த பின்னர் பவுனுக்கு 2 ஆயிரத்து 800 ரூபா என்ற அடிப்படையில் வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெற

### யாழ் மத்திய கல்லூரி அபிவிருத்திச் சங்கமும் ஜனதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27

1,000 மீட்டர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் வாங்கும்படி, யாழ் கோட்டை இராணுவமுகாமில் இருந்து 250 மீட்டர் தூரத்தில் உள்ள யாழ் மத்திய கல்லூரி அபிவிருத்திச் சங்கம், ஜனதிபதியைக் கோரியுள்ளது.

மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஊடாக யாழ் மத்திய கல்லூரி அபிவிருத்திச் சங்கம் இந்த மகஜரை ஜனதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

கோட்டை இராணுவ முகாமை உடனடியாக அகற்றும்படியும் சங்கம் ஜனதிபதியைக் கோரியுள்ளது

மகஜர் வருமாறு:

கோட்டை இராணுவ முகாமில் இருந்து 250 மீட்டர் தூரத்தில் கல்லூரி அமைந்துள்ளது.

அமைதியாக இருந்து பாடங்களை படிக்க முடியாத நிலைமை பாதுகாப்பு வலயப் பிரகடனத்தினுல் மாணவருக்கு ஏற்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின்போது ஷெல்கள் பாடசாலை வளவில் விழுந்தன ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை.

ஆயினும் ஆபத்து எந்த நேரமும் வரும் என்பதை இது விளக்குகின்றது.

150 ஆண்டு சரித்திரம் கொண்ட இப்பாடசாலையில் 75 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். 2,000 மாணவர் வரை பயில்கின்றனர்.

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் தேசிய பாதுகாப்பு அமைச்சர், யாழ் இராணுவ இணைப்பதிகாரி, யாழ் அரசாங்க அதிபர் போன்றோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### மண்டைதீவில் தபால் சேவை சீர்குலைவு

திருநெல்வேலி ஜன. 27

மண்டைதீவு பகுதிக்கு முற்ருக பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் தபால் சேவையும் சீர்குலைந்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக மெயில் சேவை ஸ்தம்பித்த காரணத்தால் இப்பகுதியில் தபால் விநியோகமும் நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும் இது தொடர்பாக மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனால் கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து மீண்டும் மெயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### விமானப்படை வீரர் விளக்க மறியலில்

கொழும்பு, ஜன. 27

விமானப் படை வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டது தொடர்பாக இன்னொரு விமானப் படை வீரரை விளக்கமறியலில் வைக்குமபடி நீதிவான் உத்தரவிட்டார்.

கொழும்பு பிரதம நீதிவான் கொலின் அமரசிங்க முன்னிலையில் சந்தேக நபரான விமானப் படை வீரர் ஜயலத் காமினி ஆஜர் செய்யப் பட்ட சமயம் நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார்.

மதவலை ஹேரத் என்ற சக வீரரை, இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த சந்தேகத்தின் மீது இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

### வேலணை உதவி அரச அதிபர் பணிமனை முன் இன்று மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 27

புங்குடுதீவு வெகுஜன விழிப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வேலணை உதவி அரச அதிபர் பணிமனை முன்பாக இன்று 27 ஆம் திகதி மறியல் போராட்டம் நடைபெறுகிறது.

இது சம்பந்தமான தீர்மானம் சமீபத்தில் நடந்த பிரஸ்தாப ஒன்றியத்தின் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

- மறியல் போராட்டத்தை பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மட்டுமல்லாது ஏனைய பகுதிகளிலும் நடத்த வேண்டும்.
- அகதிகள் புனர்வாழ்வுக்கு நிதி சேகரிப்பது.
- உள்ளூர் கைத்தறி நெசவு ஆடைகளை ஒன்றியம் பெற்று ஊர்தோறும் விற்று உதவுவது. இதன் மூலம் சுதேச உற்பத்தியை ஊக்குவிப்பது.
- பொதுவேலைத் திட்டத்தின் கீழ் போராளி இயக்கங்களின் ஐக்கியமான போராட்டத்தை முன் எடுக்குமாறு வலியுறுத்துவது.

### அபிவிருத்தி சபை பிரசாரக் கூட்டங்கள்

#### அடுத்தமாதம் ஐ. தே. க நடத்தும்

கொழும்பு, ஜன. 27

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களுக்கான பிரசாரக் கூட்டங்களை அடுத்த மாதத்தில் இருந்து நடத்துவது என்று ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இது சம்பந்தமாக முடிவு செய்யப்பட்டது.

கூட்டம் புதன்கிழமை ஜனதிபதி ஜெயவர்த்தன தலைமையில் நடந்தது.

முதலாவது பிரசாரக் கூட்டம் பொலன்னறுவையில் நடைபெறும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் நடைபெறும் கூட்டங்களில் மட்டுமே ஜனதிபதியும் பிரதமரும் கலந்து கொள்ளுவர்.

### கீரைக்கறி உண்டவர்கள் மயக்கம்

மட்டக்களப்பு, ஜன 27

மட்டக்களப்பு நகரில் வல்லைக்கீரை சாப்பிட்ட ஏழு பேர் மயக்க நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றது.

ஆசிரியர் ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே இவர்கள்.

கடும் வாந்திக்குப் பின்னர் இவர்கள் அனைவரும் மயக்கம் அடைந்து விட்டனர்.

மக்கள் முகம்

### சேவை நலம் பாராட்டு விழா

கொடிகாமம், ஜன. 27

அண்மையில் ஓய்வு பெற்ற சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. க. மகேஸ்வரன் அவர்களின் சேவை நலம் பாராட்டு வைபவம் நாளை மறுதினம் புதன்கிழமை கல்லூரியில் நடைபெறும்.

கல்லூரியின் புதிய அதிபர் திரு. கே. எஸ். குகதாசன் வைபவத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிருர்.

மினி சினிமா

நவா மினி
(உஷாமினி முன்பாக)
Timothy Brent,
Tony Marcel,
Alan Corllians,
TORNADO
நவீன ஆயுதங்களைப் பாவித்துப் போராடும் மிகச் சிறந்த படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

ஒருவர்க்கு வேண்டுவது எல்லாம் இறைவனது அருளே. ஒருவர் அதற்காகவே பிரார்த்தனை செய்யவேண்டும்.

- அன்னை சாரதாதேவி

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, உவறு ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், 27-07-86 தொலைபேசி: 24805 22078 த. பெ. 28

## இளிநொச்சிப் படுபயங்கரம்

ரயில் ஏறுவதற்காக, ரயில் நிலையத்தில் காத்து நின்ற பிரயாணிகள் பதினொரு பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் இந்தச் சம்பவம் படுபயங்கரமானது; அதிர்ச்சி தருவதும் ஆகும்.

தமிழ்ப் பகுதிகளில் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுவது இப்போது ஒரு சாதாரண நிகழ்ச்சி. தமிழர்களின் உயிர் மதிப்பற்றது என்று அரசாங்கம் கருதுகிறது நாளாந்தம் ஆகக்குறைந்தது இரண்டு மூன்று சம்பவங்களிலாவது தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். அவர்களில் 99.9 வீதத்தினரும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் சாதாரண (சிவிலியன்) மக்கள்.

இந்தச் சாதாரண சிவிலியன்களை அரசாங்கப் படைகள் கொன்றதும், அவர்கள் பயங்கர வாதிகள் ஆக்கப்படுகிறார்கள்; பட்டம் சூட்டப்படுகிறார்கள்.

இப்படியான சம்பவங்கள் எல்லாவற்றையும் பூசிமெழுகி உலகத்துக்கு நியாயம் காட்டுவதற்காக ஒரு சட்டத்தையும் அரசாங்கம் இயற்றி வைத்திருக்கிறது. அதற்குப் பெயர் தான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்.

சிவிலியன்களைச் சுட்டுக் கொன்று விட்டு, வெகு இலகுவாக "இந்தச் சம்பவத்தில் இத்தனை பயங்கரவாதிகள் கொலை செய்யப்பட்டு விட்டார்கள்" என்று அறிக்கை ஒன்றை விடுத்து "லங்கா புவத்திடம்" கொடுத்து விடுகிறார்கள்.

அது இல்லாத பொல்லாத சோடனை எல்லாவற்றையும் போட்டு, "அவர்கள் தாக்க வந்தார்கள். படைகள் திரும்பத் தாக்கின" என்றவாறு வீரப்பிரதாபங்களையும் சேர்த்து பொய் மூடைகளை அவிழ்த்து விடும். அதனை இங்குள்ள வெளிநாட்டு செய்தியாளர்களும் 'கவ்வி'க் கொள்கிறார்கள். அதனால் இலங்கை அரசாங்கப் படைகள் நாளாந்தம் பெரிய வீரம் புரிந்து வருவதாக வெளிநாடுகளில் பரப்பப்படுகிறது.

நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ் மக்கள தமது அன்றாட அலுவல்களைக் கவனிக்கச் செல்லும் போதும், வீடுகளில் இருக்கும் போதும் சுட்டுக் கொல்லப்படுவது வெளிநாட்டாருக்குத் தெரிவதில்லை.

இதே பாணியில், கிளிநொச்சி ரயில் நிலையக் கொலைகளும பயங்கரவாதிகள் கொலை செய்யப்பட்டதாகவே பரப்பப்படும் என எதிர்பார்க்கலாம்.

அதனால் இந்தச் சம்பவத்தின் ஆழம், பாரதூரம் என்பன வெளிநாடுகளில் உணரப்படமாட்டா. வெளிநாடுகளில் இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தால அதன் தாக்கம் பெரிதாக உணரப்பட்டிருக்கும்.

ரயில் ஏறுவதற்கு காத்து நின்ற பயணிகளை, ஒரு நிமிட நேரத்தில் சுட்டுத் தள்ளுவதென்றால் அது மிகவும் பாரதூரமான குற்றச சம்பவம். கொள்ளையர் கூட்டம் அல்லது சட்டவிரோதக் கும்பல் ஒன்று அதனைச் செய்திருப்பினும் கூட, அது பற்றி விசாரணை நடத்தித் தண்டனை வழங்க வேண்டியது சாதாரண நடைமுறை.

ஆனால் அரசாங்கத்தின் சட்ட பூர்வமான படையினர் அந்தக் கொலைகளைச் செய்தாலும், அரசின் பிரசாரத் தந்திரமும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் படையினரை நிரபராதிகள் ஆக்கி விடுகின்றன. இதுவும் ஒருவகை ஜனநாயகமாக இலங்கையில் மாறி வருவது மிகவும் வருத்தத்திற்கு உரியது. இதனை வெளிநாடுகள் அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் போவதும் தமிழ் சிவிலியன்களின் துரதிர்ஷ்டம்.

ரயிலில் பயணம் செய்யச் சென்ற சாதாரண மக்களும் "பயங்கரவாதிகளாகவே" அரசுக்குத் தெரிந்தால் தமிழன் எவனும் இனி ரயிலில் பயணம் செய்ய முடியாமற் போகும்.

ரயிலில் பயணம் செய்யும் பிரயாணிகளுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய அரசாங்கம், அதைப் பற்றிச் சிறிதும் அக்கறை இல்லாமல் தட்டிக் கழித்து விடுமா?

இந்தச் சம்பவத்திலாவது தமிழ் மக்களின் பாதுகாப்பில் அரசுக்கு இருக்கும் அக்கறையை மதிப்பிட ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

சில பகுதிகளில்

## சட்டத்தை நிலைநாட்ட பொலீஸாரால் முடியவில்லை

### ஐ. ஜி. பி. ஒப்புக்கொள்ளுகிறார்

வத்தேகம, ஜன.27

இலங்கையின் சில பகுதிகளில் ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்ட பொலீஸாரால் முடியாமல் உள்ளது. இப்படி பொலீஸ்மா அதிபர் சிரில் ஹேரத் ஒப்புக் கொண்டார்.

வத்தேகம என்னும் இடத்தில் பொலீஸ் நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் இக் கருத்தை அவர் வெளியிட்டார்.

ஜனநாயகத்தின் காவலர்கள் பொலீஸ் படை என்றும் பொலீஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

# இந்தியா ஆக்கிரமித்தால் உண்மை தெரிந்து விடும்

## 'இந்து' ராமுக்கு ஜே. ஆர். பேட்டி

ஜனாதிபதி ஜெயவர்த்தன 'இந்து' ஆங்கில நாளிதழுக்கு அண்மையில் பேட்டி ஒன்றை அளித்தார்.

ஜனவரி 17ஆம் திகதி காலையிலும் மாலையிலுமாக 3மணி நேரம் திரு.ஜெயவர்த்தனவை 'இந்து' இணையாசிரியர் திரு.என். ராம் பேட்டி கண்டார்.

ஜனாதிபதி மாளிகையில் காலையில் நடந்த பேட்டி மாலையில் ஜனாதிபதியின் வார்ட் பிளேஸ் இல்லத்தில் நடந்தது.

போதாக்குறைக்கு ஜனாதிபதி சனிக்கிழமையும் திரு. ராமை அழைத்துப் பேட்டி கொடுத்தார்.

ஒலிப்பதிவு நாடாவில் பதிவான பேட்டியின் முதல் பகுதி இன்று பிரசுரமாகிறது.

இலங்கையில் தற்போது நிலவுவது இனப் பிரச்சினை அல்ல; பயங்கரவாதப் பிரச்சினை தான்.

இது என் சொந்த அபிப்பிராயம்.

தமிழர் பிரச்சினை என்றால் என்ன? அது என்ன என்று எனக்குச் சொல்வீர்களா?

எதனால் தமிழர்கள் அவதிப்படுகின்றனர்?

எல்லாருக்கும்போன்று தமிழருக்கும் இந்த நாடு சொந்தமே!

இராணுவத் தீர்வில் வெற்றிகாண வேண்டும் என்பதில் மிக ஆர்வம் கொண்டவர்களாக சிங்கள மக்கள் உள்ளனர். இதை எல்லாம் எதிர்த்து நாம் போராட வேண்டியுள்ளது.

பௌத்த பிக்குகள் சிங்களத்தை மட்டும் தான் படித்துள்ளனர்.



"இவற்றை 'எல்லாம் நான் மீற போகிறேன்'"

1983 ஜூலை–ஆகஸ்ட் மாதங்களில் இலங்கையில் இடம் பெற்றது நிச்சயமாக இனக்கொலை தான். நாட்டின் சில பகுதிகளில் தான் இடம் பெற்றது

### பாதுகாப்பு வலயம்

வட பகுதியில் பாதுகாப்பு வலயம் பிறப்பிக்கப்பட்டது ஆக்கிரமிப்பு நடத்துவதற்கு அல்ல.

தீவிரவாதிகள் கோட்டை மீது சுட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

திருப்பித்தாக்குவதற்கு எம்மிடமும் ஆயுதம் உண்டு. நாம் திருப்பித் தாக்கினால் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள்.

அவர்களை எச்சரிக்கவே பாதுகாப்பு வலயம்.

தீவிரவாதிகள் சுடாமல் இருப்பதற்காகவே இந்த வலயம்.

இங்கு வரவேண்டாம் என்று பொதுமக்கள் தீவிரவாதிகளுக்குக் கூறலாம். பொதுமக்களால் அதைச் செய்ய முடியும்.

இல்லாவிடில் நாம் எல்லாரும் இறந்து விடுவோம்.

### 'சி' இணைப்பு

திரு.பார்த்தசாரதியும் நானும் சேர்ந்து தான்'சி' இணைப்பைத் தயாரித்தோம். இதில் உள்ள ஆலோசனைகளைத் தான் நான் சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பித்தேன். சர்வகட்சி மாநாட்டில் முன் வைக்கப்பட்ட ஆலோசனைகளில் 90 சதவீதமானவை 'சி' இணைப்பில் உள்ளவை தான்.

இவற்றைக் கூட்டணி நிராகரித்தது தவறு. இதன் மூலம் கூட்டணி என்னை கஷ்டமான நிலைக்குக்கொண்டுவந்துள்ளது.

### இந்தியா படை எடுக்கட்டும்

இந்தியா,எதிரான ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தால், நாம் எங்கே நிற்கின்றோம் என்பது தெரிந்து விடும். அது நடக்க வேண்டும் என்று தான் நானும் விரும்புகின்றேன்.

இது பற்றி விவரித்துக் கூறும்படி 'இந்து' இணையாசிரியர் கேட்டதற்கு திரு. ஜெயவர்த்தன சொன்னதாவது;

அது நடக்க வேண்டும். முடித்து விட வேண்டும். பொருளாதார ரீதியில் கொஞ்சம் கொஞ்சமாக சாவதை விட ஒரேயடியாகக் கொன்று விடுவது உத்தமம்.

சர்வதேச ரீதியில் ஜனநாயக நாடு என்ற வகையில் எமக்கு இருந்த பெருமை, மதிப்பு எல்லாம் போய்விட்டது.

எப்படிமனித உரிமைகள் மீறப்படுகின்றன, பார்த்தீர்களா? சிங்களவரும் தமிழரும் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குஉணவில்லை. நான் என்ன செய்கிறேன்? லட்சக்கணக்கான ரூபா பணத்தை அபிவிருத்திக்குச் செலவழிக்கின்றேன்.

ஆனால் மக்களுக்கு ஒரு நன்மையும் இல்லை.

இந்தியா ஆக்கிரமித்தால், எல்லாருக்கும் உண்மை விளங்கி விடும். நாம் சண்டைபோட்டு வெல்வோம். அல்லது சாவோம்.

### நாங்கள் பிசாசுகளா?

(நகைச்சுவை கலந்தது போன்ற தொனியில்)

'இந்து', குறிப்பாக என்னைப்பற்றி குரூரமாக எழுதுகிறது.

ஜி. கே. ரெட்டியின் கட்டுரைகள் அப்படித் தான் உள்ளன.

நாங்கள் எல்லாரும் பிசாசுகள் என்று 'இந்து' எண்ணுகிறது.

(வளரும்)

## ராம்கூலம் மறைவுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜன. 27

முன்னாள் மொரீசியஸ் நாட்டின் தேசாதிபதி சிவாகர் ராம்கூலமின் மறைவு குறித்து உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் அனுதாபம் தெரிவித்து உள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கக்கிளை செயற்குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய தேசாதிபதியாக நியமனம் பெற்றுள்ள வீரசாமி ரங்காருக்குப் பாராட்டுத் தெரிவித்தும் இக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியது.



### பொய்யாமொழி

குறள்:

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

பொருள்:

மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைச்கு மங்கலம் என்று கூறுவர், நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்ல அணிகலம் என்றும் கூறுவர்.

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண

# அஹிம்சை ரீதியில் நேரடி நடவடிக்கை

## சர்வதேச இயக்கம் திட்டம்

அஹமதாபாத், ஜன 26

இலங்கைப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு வேண்டி அஹிம்சை ரீதியில் நேரடி நடவடிக்கையில் ஈடுபட சர்வதேச இயக்கம் ஒன்று முன்வந்துள்ளது

அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச சமாதானப் படை என்ற இயக்கமே இதில் ஈடுபட உள்ளது. Peace Brigate International என்பது தான் இயக்கத்தின் ஆங்கிலப் பெயர்

குஜராத் மாநிலத்தில் வெட்ச்சி என்னும் கிராமத்தில் நடந்த இயக்க மாநாட்டில் இதுசம்பந்தமான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அஹிம்சை ரீதியில் நேரடி நடவடிக்கையில் ஈடுபட முன்னர், அது சம்பந்தமான அணுகு முறைகளை சிங்களவருக்கும் தமிழருக்கும் போதிக்கும் பயிற்சி முகாம் ஒன்றை இயக்கம் இந்தியாவில் நடத்த உள்ளது. சில மாதங்களுக்கு நடைபெற உள்ள இப் பயிற்சி முகாமில் தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த பௌத்த பிக்குகளும் கலந்து கொள்வர்.

அரசியல் சார்பற்றகுஜராத் மாநிலத்தைச் சேர்ந்த தலைவர் ஒருவர், பயிற்சி முகாமை நடத்துவார்.

இத்தகவலை இயக்கத்தின் ஸ்தாபகரும் அமைப்பாளருமான திரு. சார்ள்ஸ் வாக்கர் தெரிவித்தார்.

இதுபோன்ற பயிற்சி முகாம். தென்ஆபிரிக்காவிலும் நடத்தப்படும்.

இனவேற்றுமைக்கு எதிராகப் போராடும் மனித உரிமையாளர்களுக்காக இந்த முகாம் நடத்தப்படும் என்று திரு. வாக்கர் சொன்னார்.

## கட்டுநாயக்காவில் தனிப் பிரிவு போராளிகளைக் கண்டுபிடிக்க

### சனிக்கிழமை முதல் இயங்கத் தொடங்கியது

கொழும்பு, ஜன. 27

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு விமானம் மூலம் வந்து சேரும் போராளிகளையும், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் இனம் காண்பதற்காக கடந்த சனிக்கிழமை முதல் தனியான அலுவலகம் ஒன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இயங்கத் தொடங்கியிருக்கிறது.

புலனாய்வுத்துறை அதிகாரிகளும், குடிவரவு, குடியகல்வு திணைக்கள உயர் அதிகாரிகளும் இணைந்து இப்பிரிவில் கடமையாற்றுவார்கள்.

இந்த அலுவலகம் 24 மணி நேரமும் இயங்கும்.

சமீபத்தில் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட இருவர் போராளிகள் என அடையாளம் காணப்பட்டதை அடுத்தே இந்த ஏற்பாடு.

## மனிதனை அழிக்க மனிதனே பயங்கர ஆயுதங்களைப் பாவிப்பதா?

### யாழ். மாவட்ட அமைச்சர்

கொழும்பு, ஜன. 27

மனிதனின் உயிர் விலை மதிப்பற்றது. அப்படிப்பட்ட மனித உயிரை அழிப்பதற்கு மனிதனே பயங்கர ஆயுதங்களைப் பாவிப்பதா?

இதை எந்த ஒரு நாடும் ஆதரிக்காது.

இப்படிச் சொன்னார் யாழ். மாவட்ட அமைச்சரும் தம்பதெனியா எம். பி. யுமான திரு. யு பி விஜேகூன்.

பொல்காவலையில் நடந்த கூட்டம் ஒன்றில் திரு. விஜேகூன் பேசுகையில் சொன்னதாவது:

ரஷ்யாவிலே எத்தனையோ இனங்கள் உள்ளன. எந்தச் சிறுபான்மை இனமும் நாம் புறக்கணிக்கப்படுகிறோம் என்று அங்கு கூறியது கிடையாது.

100க்கு மேற்பட்ட இனங்கள் வாழும் அந்த நாட்டில் சுமுகநிலை நிலவுகின்றது. இரண்டு,மூன்று இனங்கள் வாழும் நம் நாட்டில் அந்த நிலைமையைக் காணமுடியவில்லை.

இப்படி யாழ். மாவட்ட அமைச்சர் திரு. விஜேகூன் சொன்னார்.

ரஷ்ய—இலங்கை நட்புறவுச் சங்கக் கூட்டத்தில் பேசுகையிலேயே இக் கருத்துக்களை மாவட்ட அமைச்சர் வெளியிட்டார்.

## இரு நேர பாடசாலை

யாழ்ப்பாணம், ஜன. 27

உடுப்பிட்டி கல்வி வட்டாரத்தில் முன்னர் இருநேரப் பாடசாலைகளாக இயங்கியவை மீண்டும் இருநேரமாகச் செயற்பட இருக்கின்றன.

இவை இடைக்காலத்தில் ஒரு வேளைப் பாடசாலைகளாக இயங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு.வி. கே. [illegible] இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளார்.

## அகற்றமுன் கண்ணிவெடி வெடித்தது

மட்டக்களப்பு, ஜன. 27

ஆயுதப் படையினர் அகற்றுவதற்கு முன்னரே கண்ணிவெடி வெடித்தது.

இச்சம்பவம் மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் முறக்கொட்டாஞ்சேனை என்னும் இடத்திற்கு அருகில் நடந்தது.

கண்ணிவெடி வைக்கப்பட்டுள்ளதாக ஆயுதப் படையினருக்குத் தகவல் கிடைத்தது

அதைத் தொடர்ந்து படையினர் குறிப்பிட்ட இடத்துக்குவிரைந்தனர்.

கண்ணிவெடியை அகற்றுவதற்கு முன்னரே, அது வெடித்து விட்டது. சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## இந்திய அரசின் கவனத்திற்கு தெல்லிப்பளை, ஏழாலைச் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 27

தெல்லிப்பளை, குரும்பசிட்டி, கட்டுவன், குப்பிளான், ஏழாலை பகுதிகளில் அடுத்தடுத்து நிகழ்ந்து வரும் தாக்குதல்களினால் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் இன்னல்கள் குறித்து இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் முன்னாள் தலைவர் திரு என் இராசேந்திரம் இப்பகுதி மக்களின் பிரச்சினைகளை இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிற் மூலம் இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்து உள்ளார்.

இம்மாதம் 15–ம் திகதி தொடக்கம் இப்பகுதியில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தாக்குதல் விவரங்களையும் அவர் விவரித்துள்ளார்.

இப்பகுதிகளில் வாழ்ந்த மக்களில் பெரும் பாலானோர் தமது வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர். அங்கு வாழ்பவர்கள் மரண பயத்துடன் வாழ்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் செவ்வனே கிடைப்பதில்லை. இப்போதும் ஹெலிக்கொப்டர்கள் தாழ்ந்து பறந்து கொண்டிருக்கின்றன. இதனால் இப்பகுதிகளில் பீதி நிலவுகிறது.

இவ்வாறு திரு. இராசேந்திரம் திரு டிக்ஸிற்றிடம் எடுத்துக் கூறினர்.

இச்சம்பவங்களை யிட்டு கவலை தெரிவித்த திரு. டிக்ஸிற் இவற்றை ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக வாக்குறுதி அளித்தார்.

## இளைஞர் மரணம்

கைதடி, ஜன. 27

நாவற்குழியில் கடந்த சனியன்று இரவு நடந்த மோதலில் மட்டுவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மரணமானதாகக் கூறப்படுகிறது.

## அழகு பவனி வரும் அப்பர் சுவாமிகள்

லோக க்ஷேமத்தின் பொருட்டு திரிமலை க்ஷேத்திரத்திலிருந்து பவனி விழா வரும் அப்பர் சுவாமிகள் கடந்த 17-1-86 வெள்ளிக்கிழமை காலை மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி கோயிலுக்கு எழுந்தருளினர்.

கோயிலைக் கும்பிட வண்ணம் வலமாக வந்து புராணபடனம் நிகழ்த்தும் காட்சி கண்கொள்

### சமய சந்திகளில்

ளாக் காட்சியாக இருந்தது. தினந்தோறும் காலை 11 மணி முதல் 12 மணிவரை புராணபடனம் நிகழும்.

இலட்சார்ச்சனை பூர்த்தி விழா இன்று திங்கட்கிழமை நிகழும். பின்னர் காலை 7 மணி அளவில் மாவை ஆதீனத்திலிருந்து புறப்படும் அப்பர் சுவாமிகள் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்துக்குப் பவனியாக எழுந்தருளிச் செல்வர்.

ஆண்டவன் புகழ் பாடும் பணியில் தம்மை அர்ப்பணித்து அழுது அடி அடைந்த அன்பரான அப்பரடிகள் சிலை இவ்வாறு அன்பர்களால் பவனி விழாவாக எடுத்து வரும் செய்கை பாராட்டுதற்குரியது.

அத்துடன் அவரது சரித்திரத்தை விளக்கு முகமாக திருநாவுக்கரசு சுவாமிகளின் புராண படலத்தை அவ்வப்போது பகுதி பகுதியாக பாராயணஞ் செய்யப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி ஆலயத்தில் ஜனவரி 27–ம் திகதி [இன்று] முதல் 30 ஆம் திகதி வரை புராணபடனம் 75 ஆம் பாடல் முதல் 90 ஆம் பாடல் வரை படிக்கப் பெறும்.

அப்பர் சுவாமிகளுக்கு அழகிய சிலை எடுத்த அன்பர்கள் சைவ மணங் கமழும் வண்ணம் அதனைப் பவனி விழாவாக ஆலயந்தோறும் எடுத்து வருவது போற்றத் தகுந்தசொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான போட்டோஸ்ரட் பிரதி
உடனுக்குடன் தெளிவாகப்
பெற்றுக்கொள்ள
SUNLIGHT
Dry Cleaners
(பஸ்நிலைய முன்பாக)
யாழ்ப்பாணம்.

# உதயன்

27-01-1986

வட மாகாணத்திலே
தனிச் சிறப்பான சேவை
SUNLIGHT
Dry Cleaners
(Opp. Bus Stand)
JAFFNA.

# பாதுகாப்பு வலயம் தவிர வேறு என்ன வழி உண்டு?

## கேட்பவர்: லலித்!

கொழும்பு. ஜன. 27

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்கவில்லை.

பேச்சுக்களை நடத்துவதற்கு இந்தியா உதவுகிறது.

திட்டவட்டமான அரசியல் யோசனைகளை தீவிரவாதிகளைக் கொண்டு சமர்ப்பிக்க வைப்பதில் இந்தியா தோல்விகண்டுவிட்டது.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி சொன்னார்.

கொழும்பில் இருந்து வெளியாகும் 'சண்டே ஒப்சேவர்' ஞாயிறுவார ஏட்டுக்கு அமைச்சர் பேட்டி அளித்தார்.

அந்தப்பேட்டியிலேயே இப்படிக் கூறினார்.

பேட்டி வருமாறு:-

கேள்வி: பாதுகாப்பு அமைச்சராகப் பதவி ஏற்ற சமயம் 300 தீவிரவாதிகள்வரைதான் நாட்டில் இருப்பதாகச் சொன்னீர்கள்.

பல தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டனர். அதன்படி பார்த்தால் தீவிரவாதிகள் ஒருவரும் நாட்டில் இப்பொழுது இருக்க முடியாதே! இப்பொழுது உங்கள் மதிப்பு என்ன?

பதில்; எனது முன்னைய மதிப்பு ஊகத்தில் அமைந்ததே

தீவிரவாதிகள் இப்பொழுது ஆயிரக் கணக்கில் உள்ளனர் 83 84, ...ம் ஆண்டுகளில் பெருந்தொகையான இளைஞர்கள் இயக்கங்களில் சேர்ந்துள்ளனர். ...ர் நிர்ப்பந்தம் காரணமாக சேர்த்தனர்.

எல்லோரும் இந்தியாவுக்குப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர்.

மூன்றும் இரண்டு வாரங்களில் இவர்களில் ஒரு பிரிவினர் வர உள்ளனர்

இவர்கள் எல்லாரும் தீவிரவாதிகள் அல்லர். அவர்களில் உதவியாளர்கள், கிரனேட் எறிபவர்கள், தகவல் கொடுப்பவர்கள், துப்பாக்கி வீரர்கள் என்று பலர் உள்ளனர்.

சென்னையில் உள்ள தீவிரவாதிகளின் படி, குடிமக்கள் கொல்லப்பட்டு இருந்தால் இலங்கையில் தமிழ் மக்களே இருக்கமாட்டார்கள்.

நாமும் குடிமக்களைக் கொலை செய்திருந்தால், தீவிரவாதிகள் கொஞ்சமாவது நாட்டில் இருக்கத்தான் வேண்டும்.

கேள்வி: யுத்த நிறுத்தம் இன்னும் அமுலில் உள்ளதா? நடப்பது எல்லாம் அதற்கு முரணாக உள்ளதே!

பதில்; யுத்தநிறுத்தம் அமுலில் உள்ளதாக தீவிரவாதிகளும் சொல்கிறார்கள்; நாமும் சொல்கிறோம்.

யாழ், வன்னி, திருமலைப் பகுதிகளில் வன்செயல் குறைந்துவிட்டது.

தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் பிரதேசத்தைக் கொண்டு வரும்பொழுதுதான் வன்செயல்கள் அதிகரிக்கின்றன.

திருமலையைப் பாருங்கள். எமது கட்டுப்பாட்டில் திருமலை உள்ளது.

கேள்வி: கண்டமாதிரி கைதுசெய்வதும் தடுப்புக் காவலில் வைப்பதும் பற்றியது இக்கேள்வி. அப்படி காவலில் இருப்பவர்களுக்கு எதிராக சாட்சியங்கள் இல்லாவிட்டால் விடுதலை செய்வது தானே? சாட்சியங்கள் இருந்தால் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவேண்டும்.

பதில்: உண்மை. முற்றிலும் உண்மை ஊழியர் பற்றுக்குறை காரணமாகத்தான் இதில் தாமதம் ஏற்படுகின்றது.

கேள்வி: அரச படைகளுடன் கூலிப்படை சேர்ந்து பணி புரியவில்லையா?

பதில: எம் பக்கத்தில் கூலிப்படை இல்லை நீங்கள் வந்து பார்க்கலாம்.

தீவிரவாதிகள்தான் சில வெளிநாட்டு நண்பர்களை வைத்துள்ளார்கள்.

கேள்வி: அரசியல் தீர்விலும் பார்க்க இராணுவத் தீர்வை நோக்கிய நாம் போய்க்கொண்டிருக்கிறோம் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

நிலைமையைச் சமாளிக்க ஆயுதப்படையினர் தயாராக உள்ளார்களா?

பதில்! இராணுவத் தீர்வில் எனக்கு நம்பிக்கை இல்லை. தீவிரவாதிகள் இராணுவ நடவடிக்கை எடுக்கும் பொழுது நாம் பதிலடி கொடுக்கிறோம்.

கேள்வி; பாதுகாப்பு வலயப் பிரகடனத்தினால் யாழ்மக்கள் நோக்கும் அபாயம்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில்: வேறு என்ன மாற்றுவழி உண்டு?

இராணுவத்தை அகற்ற வேண்டுமென்று பிரஜைகள் குழுக்கள் கேட்கின்றன

இது உண்மையிலேயே தீவிரவாதிகளை ஆதரிப்பதாகும். போர் ஒன்றில் பிரதேசத்தைக் கைப்பற்றவேண்டும்; பிரதேசத்தைக் கைவிடுவது அல்ல.

யாழ் நகரைப் பொறுத்தவரை உள்ள பிரச்சினை, சன நெருக்கடி மிகுந்த நகரம் என்பதே.

ஆகவே நாங்கள் மிக மிக அவதானமாக நடக்கிறோம்.

## என் கண்ணுக்கு முன்னாலேயே மகனைச் சுட்டுக் கொன்றனர்

### நானும் மனைவியும் சுருண்டு விழுந்தோம்

### கிளிநொச்சி பயங்கரம்பற்றி இளம் குடும்பஸ்தர் விவரிப்பு

— நல்லூர் செய்தியாளர்;- க. இரத்தினராஜசிங்கம் —

நல்லூர், ஜன.27

என் கண்முன்னாலேயே எனது ஒன்பது வயது மகன் சூடுபட்டு, சுருண்டு விழுந்து மரணமானான்.

மனைவி குளறிக் கொண்டு பிளாட்பாரத்தில் விழுந்தாள்.

மற்றைய குழந்தைகத் தியபடி கையைப் பொத்திக் கொண்டு ரயில்நிலைய அதிபரின் அறைக்குள் ஓடியது. நானும் சூட்டை வாங்கிக் கொண்டு பிளாட்பாரத்தில் விழுந்தேன்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சின்னையா நல்லையா (35 வயது) இப்படிச் சொன்னார்.

அவருடைய மகன் ரூபதாஸ் (வயது 9) சம்பவம் நடந்த இடத்திலேயே மரணமானான்.

அவரும், அவரது மனைவியும் மற்றைய மகனும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்

திரு. நல்லையா மேலும் சொன்னதாவது:-

நேற்றுமுன்தினம் ஒரு மணியளவில் நானும் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் மதவாச்சி போவதற்காக கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்குச்சென்றோம்.

ரயில் வருவது தாமதமாகவே நாங்கள் சாப்பிட்டுவிட்டு பிளாட்பாரத்தில் இருந்தோம்.

இரண்டு மணியிருக்கும் கிளிநொச்சி முகாமபக்கமாக குண்டு வெடிக்கும் சத்தங்கள் கேட்டன.

அச்சமயம் பிளாட்பாரத்தில் 10 பெண்கள் உட்பட சுமார் முப்பதுக்கும் மேற்பட்டோர் அங்கு நின்றோம்.

அப்பொழுது ஏழு அல்லது எட்டு சீருடை தரித்தவர்கள் ரயில் பாதையூடாக ரயில் பெட்டிகளின் பே மறைந்து மறைந்து வந்தனர்.

இவர்களைக் கண்டு ஓடினால் துரத்தி துரத்திச் சுடுவார்கள் என்ற பயத்தினால் ஒருவரும் ஓடவில்லை.

திடீரென்று எம்மை நோக்கி துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

நின்றவர்கள் காயமடைந்து மரம் போல் கீழே விழுந்தனர்.

எனது பிள்ளைக்கும் சூடு விழுந்தது. என் கண்முன்னாலேயே எனது மகன் துடி துடித்து இறந்து விழுந்தான்.

ஐந்து நிமிடங்கள்வரை எங்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் சீருடை தரித்தவர்கள் பிளாட்பாரத்துக்கு வந்து உயிரிழந்தவர்களை ஒரு வாகனத்திலும் காயமடைந்தவர்களை வேறொரு வாகனத்திலும் ஏற்றினார்கள்.

பின்னர் எம்மை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்து ஒப்படைத்தனர் — இப்படி அவர் தெரிவித்தார்.

## தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை!

### நிந்தவூரில் சம்பவம்

நிந்தவூர், ஜன. 27

நிந்தவூர் ஐந்தாம் குறிச்சியில் கடந்த சனியன்று இரவு தமிழ் இளைஞர் ஒருவர் இனம்தெரியாத இளைஞர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இறந்தவர் இளையதம்பி கணேசமூர்த்தி (வயது27) கிழக்கிலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் ஒலுவில் வைக்கோல் கொள்வனவு நிலையத்தில் ஊழியராகக் கடமையாற்றிவந்தவர். ஒரு குழந்தைக்குத் தகப்பன்.

இரவு8மணிக்கு அவரது வீட்டு வாசலில் வைத்து இனந்தெரியாத சிலரினால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது தலையின் பின்பக்கத்தில் சூடு விழுந்திருக்கிறது.

சம்மாந்துறைப் பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

## ஒரே சூலில் குழந்தைகள்

நல்லூர், ஜன. 27

அச்சுவேலியைச் சேர்ந்த சதாசிவம் நாகேஸ்வரி என்ற பெண்மணி ஒரேசூலில் மூன்று குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரியில் பிறந்த இக்குழந்தைகள் முறையே 2 கிலோ 200 கிராம், 2 கிலோ 700 கிராம், 2 கிலோ 300 கிராம் நிறையுடையன. இவற்றில் ஒன்று பெண் குழந்தை.

தாயும், குழந்தைகளும் சுகமே வீடு திரும்பியுள்ளனர்.

## வீடியோ படம் பார்த்த யுவதி படைவீரர் வேட்டுக்குப் பலி

### வவுனியா பூந்தோட்டத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன.27

வவுனியாவில் நேற்று கொலை வீடொன்றைச் சுற்றிவளைத்த பாதுகாப்புப் படையினர் அங்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் வீடியோ படம் பார்த்துக்கொண்டிருந்த 16 வயது இளம் பெண் ஒருவர் மரணமானார்.

இறந்த இளம் பெண்ணின் பெயர் முருகேசு ...சுமி. வவுனியா பூந்தோட்டம்என்னும்இடத்தைச் சேர்ந்தவர்.

அடுத்தவீட்டில் இவர் வீடியோ படம் பார்த்துக்கொண்டிருந்த சமயம் நடைபவனியாக வந்த படையினர் அந்த வீட்டைச்சுற்றி வளைத்தனராம்.

வீட்டில் படம் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் படையினரைக் கண்டதும் பயத்தினால் ஓடியதாகவும் — அப்போது படைவீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகிறது

படைவீரர்கள் வீட்டிலிருந்த ஆண், பெண், குழந்தைகள் உட்பட 15 பேரை கைதுசெய்து தம்முடன் அழைத்துச் சென்றனர்.

இவர்கள் அனைவரும் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## கீரிமலை புனித ஸ்தலம் பாதுகாப்பு வலயத்தினுள்

### ஆட்சேபித்து பேரணி

காங்கேசன்துறை, ஜன. 27

இந்து மக்களின் புனித ஸ்தலமான கீரிமலை பாதுகாப்பு வலயத்திற்குள் வருவது இந்துமக்களை பெரிதும் புண்படுத்தியுள்ளது.

ஆகவே இந்த பாதுகாப்பு வலய ஏற்பாட்டை கைவிட வேண்டும் என்று கோரி இம்மாதம் 28ம் திகதி கீரிமலையிலிருந்து தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனை வரை ஆட்சேப பேரணி ஒன்று நடத்தப்பட உள்ளது.

கீரிமலை பிரஜைகள் குழு, பொது மக்கள், அன்னையர் முன்னணியினர், உயர் மட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் சேர்ந்து இந்த ஊர்வலத்திற்த ஏற்பாடு செய்துள்ளனர்

இந்த ஊர்வலம் கீரிமலை பஸ் நிலையத்திலிருந்து ஆரம் மாகும்.

## ரூபவாஹினி

மாலை

- 5.00 – செய்திகள்
- 5 05 – 'ஹிமான்'
- 5.30 – வாடடவில் காங்
- 6 00 – விமசும
- 6.30 – செய்திகள் – தமிழ்
- 6 55 – உதயகீதம்
- 7 25 – 'சேவன வஸன'
- 8.00 – செய்திகள் – சிங்களம்
- 8.45 – இலங்கை எதிர் இங்கிலாந்து
- 9.00 – செய்திகள் – ஆங்கிலம்
- 9.20 – ...
- 9.50 – 'ஹவாய் ஐ...'
- 10.40 – ... முடிவு

## விபத்தில் இளைஞர் காயம்

நல்லூர், ஜன. 27

ஊரெழு அம்மன் கோயிலடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கந்தசாமி சப்பித்கா சபாபதிப்பிள்ளை (30 வயது) என்ற இளைஞர் படுகாயமடைந்து யாழ் வைத்திசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் சர்வோதய இயக்கத்தில் கடமைபுரிபவர்.

அவரது தலையிலும் கையிலும் காயம் ஏற்பட்டுள்ளது.

## பல்கலைக்கழகத்தில் பொதுக்கூட்டம்

நல்லூர், ஜன. 27

யாழ் மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயம் சம்பந்தமாகவும், ... இலங்கை மருத்துவக் கல்லூரி ... ஆராய்வதற்காக பொதுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை (31-1-86) 11-30 மணியளவில் யாழ் பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

## விளையாட்டரங்கு

உதைபந்தாட்டம்

### பத்து அணிகள் போட்டி!

### நாவாந்துறையில் சிறப்பான ஆட்டம்

நல்லூர். ஜன.27

யாழ். நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலையம் நடத்திய 7 பேர் கொண்ட கண்காட்சி உதைபந்தாட்டப்போட்டிகள் கலைவாணி விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெகு சிறப்பாகவும் பரபரப்பாகவும் நடைபெற்று முடிந்தன.

இந்த உதைபந்தாட்ட போட்டிக்கு பிரதமவிருந்தினராக யாழ்.உதைபந்தாட்ட லீக் தலைவர் வைத்திய கலாநிதி ஜே. பி. சி. பிலிப் கலந்து கொண்டார்.

பத்து கழக அணிகள் இந்த உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றின.

கலைவாணி விளையாட்டுக் கழக அணி கெனடி விளையாட்டுக்கழக அணியுடன் மோதியது. இந்த ஆட்டத்தில் கலைவாணி அணி 2 கோல்களைப் போட்டு வெற்றியீட்டியது.

இரண்டாவது ஆட்டத்தில் யாழ்.பிறண்ஸ் முஸ்லிம் கழக அணியும்,சென் பேரிஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.இதில் சென் மேரிஸ் அணி 5 கோல்களைப் போட்டு ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

யாழ்—பிறண்ஸ் முஸ்லிம் விளையாடடுக் கழகத்தினால் 3 கோல்களை மட்டுமே போட முடிந்தது.

மற்றொரு ஆட்டத்தில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி யாழ் முஸ்லிம் லீக் அணியுடன் மோதியது. இந்த ஆட்டத்தில் இரண்டு அணிகளும் தலாமூன்று கோல்களை போட்டதால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

நான்காவது ஆட்டத்தில் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணி சென் மேரிஸ் அணியிடம் 3—1 என்ற கோல கணக்கில் தோல்வியடைந்தது.

கடைசி ஆட்டத்தில் சென். நிக்கலஸ் விளையாட்டுக் கழக அணி, பாடும் மீன்விளையாட்டுக் கழக அணியை 2—0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

### விளையாட்டு மைதானம் புனரமைப்பு

சுன்னாகம், ஜன. 27

சீர்கெட்டிருந்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயா பழைய விளையாட்டு மைதானம் நேற்று புனரமைக்கப்பட்டது.

அயல் இளைஞர்கள் சிரமதான அடிப்படையில் மைதானத்தை சீரமைத்தனர்.

## கூட்டணியினரின்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோருடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

அடுத்த மாதம் நான்காம் திகதி நடக்கும் இலங்கையின் சுதந்திரத் தினக் கொண்டாட்டங்களிலும் திரு. பண்டாரி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளக்கூடும் என்றும் கொழும்பில் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. பண்டாரி இங்கிருந்து புதுடில்லி சென்றதும் இலங்கை அரசின் பூர்வாங்கப்பதில்குறித்து கூட்டணித் தலைவர்களுடன் பேசுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

கூட்டணி சமர்ப்பித்த நான்கு யோசனைகளும் வருமாறு:-

1. வடக்கு — கிழக்கு இணைந்த ஒருமொழிவாரி மாநிலம்.
2. விசேஷ அரசமைப்புச் சலுகைகள்.
   (அ) குடியுரிமை.
   (ஆ) தமிழும் உத்தியோக மொழி.
   (இ) முப்படைகள் உட்பட அரச சேவையில் இனவிகிதாசார அடிப்படையில் வேலை வாய்ப்பு.
3. மாநிலஅரசுமுறை.
4. இந்திய வம்சாவளித் தமிழருக்கு விசேட சட்ட விதி.

இந்த நான்கு பிரதான யோசனைகளிலும் மொத்தம் இருபத்தி நான்கு உப அம்சங்கள் உள்ளன.

இரண்டு பட்டியல்களும் இரண்டு இணைப்புகளும் பிரதான யோசனைகளோடு சேர்க்கப்பட்டுள்ளன.

## சிறிமா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியில் சேர்ந்து கொள்வது குறித்தும் இப்பேச்சுக்களில் ஆராயப் பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனிடையில் சுதந்திரக் கட்சியில் சேருவதற்கு திரு சிறில் மத்தியூ சில நிபந்தனைகளை சுதந்திரக் கட்சியிடம் சமர்ப்பித்துள்ளாராம்.

எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் சுதந்திரக் கட்சி இந்த நிபந்தனைகளைப் பற்றிய முடிவைத் தெரிவிக்குமாம்.

இன்று திங்கட்கிழமை குடியுரிமைச் சட்டமூலம் உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு வருகிறது. அங்கு இதை எதிர்த்து சுதந்திரக் கட்சி வாதாடப் போகிறது.

உயர் நீதிமன்றத்தின் முடிவு செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றச் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வியாழன், வெள்ளிக் கிழமைகளில் நாடாளுமன்றம் சட்டமூலத்தை விவாதிக்கும்.

## தெல்லிப்பளையில் போராளி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயம் அடைந்தனர்.

ஒன்றும் அறியாத அப்பாவி மக்களை வீடுகளினுள் புகுந்து கொலை செய்தார்கள்.

இந்நிலையை தொடர்ந்து நீடிக்கவிடாமல் எமது போராளிகள் நடவடிக்கை எடுத்தனர். எம்முடன் இணைந்து சக இயக்கப் போராளிகள் நடத்திய துணிச்சல்மிகு தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது ஆயுதப் படையினர் பின்வாங்கி ஓடினார்கள்,

இப்படி பின்வாங்கிச் சென்றவர்களை பலாலி முகாமிலிருந்தும் பிரங்கித் தாக்குதலையும் ஹெலிக்கொப்டர் மூலம் ஏவுகணை தாக்குதலையும் நடத்தியதோடு மோட்டோர் ஷெல் குண்டுகளையும் வீசி அப்பாவி மக்களை கொன்றார்கள்.

சிறிலங்கா அரசு கூறுவதுபோல் இந்தச் சம்பவத்தில் எந்த இயக்கத்தைச் சேர்ந்த போராளிகளும் கொல்லப்படவில்லை. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவி மக்களே. இத்தாக்குதலில் சகல இயக்க போராளிகளும் சேர்ந்து நேருக்கு நேர் நின்று வீரம் செறிந்த தாக்குதலை நடத்தினார்கள்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## பாதிக்கப்பட்டவர் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வவுனியா மாவட்டத்தில் வன்செயலினால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலை வவுனியா பிரஜைகள் குழு தயாரித்துக் கொண்டு இருக்கிறது.

பாதிப்படைந்தவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கவே இந்த நடவடிக்கை.

பாதிக்கப்பட்டவர்களின் முழுப்பெயர், முகவரி, தொழில், வயது, பாதிப்பு விவரம் ஆகியவை உள்ளடக்கிய ஆவணங்களை, சட்டத்தரணியால் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட சத்தியக் கடதாசியுடன் இணைத்து அனுப்புமாறு வவுனியா பிரஜைகள் குழுத் தலைவர் திரு. என். எம். எக்ஸ். சொர்ணபாலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இருதயபுரச் சம்பவம்

## பகிரங்க விசாரணைக்கு பிரஜைகள் குழு கோரிக்கை

மட்டக்களப்பு, ஜன. 27

மட்டக்களப்பு இருதயபுரத்தில் கடந்த வாரம் 24 பொது மக்கள் பாதுகாப்புப் படையினரால் கொலை செய்யப்பட்டது குறித்து பகிரங்க விசாரணை ஒன்று நடத்த வேண்டும்.

மட்டக்களப்பு பிரஜைகள் குழு ஜனாதிபதியிடம் இப்படிக் கோரவிருக்கிறது.

நேற்று மட்டக்களப்பு கத்தோலிக்க மண்டபத்தில் கூடிய பிரஜைகள் குழு இப்படி முடிவு செய்தது.

இருதயபுரச் சம்பவம் குறித்து ஜனாதிபதிக்கும், ஏனைய அமைச்சர்களுக்கும், எதிர்க்கட்சி எம்.பிக்கள், தலைவர்கள் ஆகியோருக்கும், வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் மகஜர் ஒன்று அளிப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட். 207,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, ... ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 27-01-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org